[2nd November 1966

[Note:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—ADJOURNMENT MOTIONS.

(1) PROMULGATION OF PROHIBITORY ORDER IN THE FORT ST. GEORGE AREA.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss the following matter of urgent public importance, viz., 'Promulgation of the prohibitory order by the Commissioner of Police, Madras City, in the Fort St. George area to assemble peaceably, to take out peaceful processions and to make demonstrations, utterly disregarding, flagrantly violating and seriously infringing the valuable fundamental rights guranteed under the Indian Constitution and the consequent deprivation of the exercise of the right to assemble peaceably, to take out peaceful procession, to protest against injustice and to express the just demands of the people in the form of demonstration by an abuse of power by the Commissioner of Police, Madras City'."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எப்படி அவசரத்தன்மை வாய்ந்தது, அதற்கு உகந்த வகையில் இருக்கிறதா, அந்த தீர்மானத்திற்குரிய ஆர்டரில் இருக்கிறதா என்பதை மட்டும் நான் சொல்லிக்கொண்டு அமைகிறேன். இப்படிப்பட்ட தீர்மானத்திற்காக சொல்லப்பட்டிருக்கின்ற காரணங்கள் நான்கு, அதாவது,

(1) Specific matter.

(2) Recent occurrence.

(3) The matter to be discussed must involve more than the ordinary administration of the law.

(4) Must refer to a matter in which the responsibility of the Government is clearly involved. இவற்றில் இந்த அவசரத் தீர்மானம் எந்தெந்த முறையில் பொருத்தமாக இருக்கிறது என்பதைக் கூறி நான் அமைகிறேன். நேற்றையமுன்தினம் நகர போலீஸ் கமிஷனர் அவர்களால் தடையுத்தரவு போடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவில் அரசாங்கத்திற்கு எந்த அளவு பொறுப்பு இருக்கிறது என்பதைப் பார்க்கின்ற நேரத்தில் உண்மையில் மிகப் பெரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய ஜனநாயக நாட்டில் முக்கியமான பல உரிமைகள் மக்களுக்கு இருக்கின்றன. பேச்சு உரிமை, எழுத்து உரிமை, ஊர்வலங்கள் நடத்துகின்ற உரிமை, தங்கள் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்ற உரிமை இப்படிப்பட்ட உரிமைகள் எல்லாம் ஜனநாயக நாட்டில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். இவை எல்லாம் அரசியல் சட்டத்தில்

2nd November 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

அங்கீகரிக்கப்பட்டு, அரசாங்கத்தால் காப்பாற்றப்படவேண்டிய உரிமைகளாக இருக்கின்றன. இந்த சர்க்காரைப் பொறுத்தளவில், இப்படிப்பட்ட உரிமைகள் காப்பாற்றப்படாதது மட்டுமல்ல, அப கரிக்கின்ற முறையிலும், ஆக்கிரமிப்பு செய்கின்ற முறையிலும் தடைப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உரிமைகள் 'கான்ஸ் டிட்யூஷனல் ரைட்ஸ்' என்ற முறையில் தரப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் பொழுது விடிந்தால்---பாராளுமன்ற நிகழ்ச்சிகளை பார்த்துக்கொண்டிருக்கிறோம், எத்தனையோ லட்சக்கணக்கான மக்கள் இந்த உரிமைகளின் கீழ் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித் துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டசபையைப் பொறுத்த வரையில், சட்டமன்றம் கூடுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் போலீஸ் துப்பாக்கியின் மத்தியிலும், போலீஸ் வளையத்தின் மத்தி யிலும் துவங்குகின்ற ஒரு தவறான காட்சி நம்மிடையே இருந்து கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட உரிமைகளைக் காப்பாற்று வதில் 'ஓமிஷன்' ஏற்பட்டிருப்பது மட்டுமல்ல, உரிமைகளைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, உரிமைகள் தடுத்து நிறுத்தப்படு கின்ற நிகழ்ச்சியை நாம் பார்க்கிறோம். ஜனநாயக நாட்டிலும் பலாத்காரம் வரும், பலாத்காரமே இராது என்று சொல்ல முடியாது என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால், பலாத்காரத்தைத் தடுக்கின்ற முறையில் இல்லாமல் பாரபட்சமாக —ரிப்பன் மாளிகையில்—நடக்கின்ற நேரத்தில், இங்கு மட்டும் . . .

கனம் சபாநாயகர் : எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள் ? இது வரை கனம் அங்கத்தினருடைய பேச்சு சரியாக வந்தது, இப்போது எங்கோ போகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் இதையெல்லாம் 'அட்ஜோர்ன்மென்ட் மோஷனை' ப்பற்றி விவாதிக் கின்ற நேரத்தில் சொல்லலாம். இப்போது அதைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை . . .

MR. SPEAKER : The hon. Member should not refer to that matter. At this stage, let him speak on the admissibility of the adjournment motion.

SRI K. A. MATHIALAGAN : Sir, I will confine myself to the matter before the House.

இதில் சர்க்காருடைய பொறுப்பு, மக்களுக்குள்ள அடிப் படையான உரிமைகளைக் காப்பாற்றவேண்டும். அத்தகைய உத்தர வாதம் மக்களுக்கு இருக்கின்றது. அதன் அடிப்படையில் உரிமை கள் காப்பாற்றப்படாதது ஒரு குற்றம். அதுமட்டுமல்ல, புனித மான வகையில் அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை நிராகரிக்கின்ற முறையில்—தங்களுடைய பலவீன மான கொள்கைகளை மக்களுக்குத் தெரியாதவாறு திரை போடுகிற முறையில், சட்டமன்றம் துவங்குகின்ற நேரத்தில் எல்லாம் போலீஸ் வளையத்தின் உள்ளே இருந்து கொண்டு செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் கூறுவார்கள் . . .

[திரு. கே. ஏ. மதியழகன்] [2nd November 1966

'It is an ordinary administration of law' என்று. ஆனல் இது 'ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் லா' அல்ல, 'எக்ஸ்ட்ரார்டினரி அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் லா' என்ற அளவில், இன்றையதினம் 144 தடை உத்தரவையும், போலீஸ் வளையத்தையும் வைத்துக்கொண்டு சட்டசபை தொடங்கப் படுகிறது. இதை எப்படி ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் லா என்று சொல்ல முடியும்? சட்டங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் இருக்கின்றன. அதற்குரிய வாய்ப்பை அளிக்கவேண்டிய நேரத்தில், அதற்கு நேர் முரண்பாடாக, நாட்டில் பட்டினி போடுகிற தன்மையை மறைப் பதற்காக, போலீஸ் வேலியை அமைத்துக் கொண்டு, போலீஸ் துப்பாக்கிகளின் மத்தியில் சட்டமன்றம் துவங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது காங்கோ நாட்டுக்கோ அல்லது அல்ஜீரியா நாட்டுக்கோ வேண்டுமென்றால் சரியாக இருக்கலாம், ஜனநாயக நாட்டுக்கு இது ஒருக்காலும் சரியாக இராது, அந்த முறையில் இந்த சர்க்கார் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலிருந்து தவறியிருக்கிறது. அது மட்டுமல்ல, ஆக்கிர மிப்பும் செய்திருக்கிறது. துப்பாக்கிகளையும், 144 தடையுத்தரவு களையும் வைத்துக்கொண்டு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பட்டினியைக் குறைத்துவிட முடியும் என்றிருந்தால், சட்டங்கள் இந்த நாட்டில் ஒழுங்காகச் செயல்பட முடியாது. ஆகவே, இப்ப டிப்பட்ட இந்தப் பிரச்னை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உகந்த பிரச்னையாகும், இதில் மக்களுடைய அடிப்படையான உரிமைகள் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், மன்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து, அருள் கூர்ந்து இதைப்பற்றி விவாதிக்க அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சபாநாயகர் அவர்களே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்குரியதல்ல என்பதை முதலில் தாழ்மை யுடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். போலீசாரு டைய பொறுப்பு, கடமை, அமைதிக்கும் பங்கம் வராமல் தடுக்க வேண்டும், இதற்காக அவர்கள் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் சற்று முன்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். காரணம், அவர்களுக்கு முன்கூட்டியே கிடைத்த தகவல்களின் அடிப்படையில்தான் நட வடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரி கிறது. அது மட்டுமல்ல. கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கக்கூடும். சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்ற நேரத்தில் வெளியே பெருங்கூட்டம் வந்து டெமான்ஸ்ட்ரேஷன் முதலியவை நடத்தும்போது, சபையிலுள்ள அங்கத்தினர்கள் இங்கு வருவதற்குத் தடையாகப் போய்விடுகிறது. மேலும் அங்கத் தினர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். மேல் சபையிலுள்ள கனம் அங்கத்தினர் ஒருவர் இப்படிப்பட்ட கூட்டத்தினரால் தாக்கப்பட்டு, அந்த விஷயம் பற்றி முடிவு எடுக்கவேண்டும் என்று உரிமைக் குழுவுக்கு விடப்பட்டது. இந்த மாதிரி இங்கிலாந்தில் கூட ஒரு மைல் அளவுக்கு 'ப்ரொட்டெக்டட் ஏரியா' வாக வைத்துக்

2nd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கொள்ளலாம் என்று இருக்கிறது. அதே முறையில் நாமும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று இங்குள்ள உரிமைக்குழு தங்கள் சிபாரிசைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நான் படிக்கின்றேன்.

'However to prevent such instances occurring in future it seems to the Committee that it would be desirable that necessary steps should be taken by the Government to demarcate the area, say up to the War Memorial on the south, the Reserve Bank buildings on the north and the Band Practice road on the west, and no processions or demonstrations should be allowed to be held in these areas except with the prior written permission of the Commissioner of Police during the period when either House of the Legislature actually meets and sits. Specific instructions should also be issued to the concerned that whenever any trouble is apprehended sufficient steps should be taken to see that members are not molested or obstructed while they are coming to or going from the House.

என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதையொட்டி போலீசார் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்குரியதல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

(2) INCLUSION OF SALEM PLANT IN THE FOURTH PLAN

* திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையை நம்முடைய மாநிலத்தில் விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, அதைப்பற்றி விவாதிப்பதற்காக நான் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்று கொடுத்திருக்கிறேன். சேலம் உருக்காலையை இந்த மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசாங்கத்திற்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. அதே நேரத்தில், இப்போது, இது இவ்வளவு அவசரமாக வரவேண்டியதன் காரணம் என்ன, அதற்குரிய எமர்ஜென்சி என்ன என்பதைத்தான் இந்த மன்றம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் மத்திய அமைச்சரவை, இந்தியாவில் எங்கெங்கு உருக்காலைகளை ஏற்படுத்துவது என்பதைப்பற்றி முடிவு செய்ததில், சேலம் உருக்காலையைப்பற்றி எந்தவிதமான உறுதிப்பாடும் காணப்படவில்லை. அதே சமயத்தில், போராட்டங்கள் நடத்தினால், அல்லது ரயிலை நிறுத்தினால், பலாத்காரம் விளைவித்தால் ஒருவேளை உருக்காலை வரலாமோ என்கின்ற எண்ணங்களும் பலருடைய மனதில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட செயல்களின் காரணமாக அங்குள்ள முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு தொலைபேசி மூலமாக மக்களுடைய கருத்தைத் தெரிவிக்கக் கூடிய சூழ்நிலையும், பிளேனில் சென்று நேராக பிரதம மந்திரியிடத்தில் மக்களுடைய கருத்தைத் தெரிவிக்கின்ற முறையும், பாதுகாக்கப்படுகிறது என்கின்ற ஒரு உறுதிப்பாடு இப்போது